கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (மார்ச்/ஏப்ரல் 2019)

**PSS 2153** சர்வதேச உறவுகளுக்கு ஓர் அறிமுகம்
**Introduction to International Relation**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–**I** இல் இலிருந்து இரு வினாக்களிற்கும் பகுதி–**II** இல் இலிருந்து மூன்று வினாக்களிற்கும் மொத்தமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

## பகுதி – I

01. (i) சர்வதேச உறவு என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணங்களின் உதவியுடன் விளக்குக?

(10 புள்ளிகள்)

(ii) சர்வதேச உறவு தொடர்பான கற்கையின் வியாபகத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

02. (i) சர்வதேச உறவுகள் தொடர்பான ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் நவீன அணுகு முறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) தேசிய அரசுகளின் அதிகாரத்தை தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

03. பின்வரும் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வலுச் சமநிலையின் நோக்கமும் பயன்பாடும்
(ii) வலுச் சமநிலையின் வகைகள்
(iii) வலுச் சமநிலையைப் பேண பின்பற்றும் வழிமுறைகள்

(2x10=20 புள்ளிகள்)

## பகுதி – II

04. "ஆக்கிரமிப்பைத் தடுப்பதன் மூலம் உலக அமைதியைப் பேணுவதே கூட்டுப் பாதுகாப்பின் நோக்கமாகும்." இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. கெடுபிடி யுத்தத்தின் பின்னர் உலக நாடுகளிடையே ஆயுதக்களைவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

06. "சர்வதேச உறவின் அச்சாணி தேசிய அரசுகளின் தேசிய நலனே" ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. சர்வதேச சட்டத்தின் அடிப்படைத் தத்துவங்களைப் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

*****